30.07.2024

O.S.No.184/2015

வா.சா.1.திரு. உடையப்பன் த.பெ.சண்முகம் பிள்ளை

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**6** முதல் **8** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து எங்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட கண்மாய் பாசனம் என்பதால் அதில் எங்களுக்கு மட்டுமே புழக்க உரிமை உண்டு, அந்த வகையில் எங்களுக்கு பாத்தியப்பட்டது. அந்த கண்மாய் பொன்னாச்சிகுளம் கண்மாய் ஆகும். தாவா சொத்து பொன்னாச்சிகுளம் கண்மாயில் வடக்கு ஓரத்தில் அமைந்துள்ள பாறை பகுதி ஆகும். பொன்னாச்சி குளம் கண்மாய் பூதமங்கலம் கிராம சர்வே எண்.52-ல் கட்டுப்பட்டதாகும். சர்வே எண்.52-ல் சுமார் 7 ஏக்கர் விஸ்தீரணம் கட்டுப்பட்டது. தாவா சொத்தும் மேற்சொன்ன 7 ஏக்கர் விஸ்தீரணத்திற்குள் அடங்கியுள்ளது என்றால் சரிதான். மேற்படி பொன்னாச்சிகுளம் கண்மாய் பாசனம் மொத்தம் 9 ஏக்கர் நிலபரப்பு பாசனத்திற்கு உட்பட்டதாகும். எங்களுக்கு பாத்தியப்பட்டது 7 ஏக்கர் மற்றும் உடையப்பபிள்ளை வகையறாக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 9 ஏக்கர் நிலத்திற்கு மட்டும் தான் மேற்படி பொன்னாச்சி குளம் கண்மாய் பாசன உரிமை உண்டு. தற்போது வரை வருவாய் ஆவணங்களில் சர்வே எண்.52 பொன்னாச்சிகுளம் கண்மாய் என்றுதான் உண்டு என்றால் சரிதான். பொன்னாச்சிகுளம் கண்மாயில் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்ததால் அரசு தரப்பில் பி மெமோ வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. பொன்னாச்சிகுளம் கண்மாய்க்கு நீர்வரத்து பாறைக்கு மேல்புறம் கள்ளியடி குளத்தில் இருந்து வரும். பொன்னாச்சிகுளம் கண்மாய் மற்றும் அதற்கு வடக்குபக்கம் உள்ள இடைவண்ணான்பாறை ஊரணி ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து பெரிய குளமாக உள்ளது. அதில் பொன்னாச்சிகுளம் கண்மாய், பூதமங்கலம் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண்.52லிலும் இடைவண்ணான் பாறை ஊரணி, வஞ்சிநகரம் கிராமம் சர்வே எண்.211ல் அமைந்துள்ளது. தாவா சொத்தான பாறை பகுதியில் தென்புறம் பொன்னாச்சிகுளம் கண்மாய்க்கும், வடபுறம் இடைவண்ணான் பாறை ஊரணிக்கும் உட்பட்ட பகுதி ஆகும். தாவா சொத்தான பாறை பகுதியில் அருகில் உள்ள கிராமத்தார்கள் அனைவரும் நெற்கதிர்கள் அடிப்பதற்கு களமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)